# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

நரசிங்கப் பெருமாள் தோன்றினார், இரணியனைக் கிழித்தார். வராஹப் பெருமாள் தோன்றினார், இரணியாக்ஷனை அழித்தார். ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி வந்தார், விராதன், கபந்தன், கரன், தூஷணன், திரிசிரஸ், இராவணன், கும்பகர்ணன், மற்றும் பலகோடி அரக்கர்களைக் கொன்றார். ஆயர்ப்பாடிக் கண்ணன் வந்தான், குழந்தைப் பருவத்திலிருந்தே கொல்லத் தொடங்கினான். பூதனை, சகடாசுரன், கேசி, ப்ரலம்பாசுரன், தேனுகாசுரன், கம்ஸன், கௌரவர் என அவன் நாசமாக்கிய தீயவர் பட்டியல் மிக நீளமானது. வரப்போகும் கல்கி அவதாரமும் துஷ்டர்கள் மண்டிய இந்த உலகையே த்வம்சம் பண்ணுவதற்காகத் தான். கீதையில் கண்ணன் தான் நல்லோரைக் காக்க அவதரிப்பதாகக் கூறிய போது கூட ‘விநாசாய ச துஷ்க்ருதாம்’ (தீயவரை அழிப்பதற்கும்) என்றான்.

காக்கும் கடவுள் என்று பெயர் கொண்ட திருமால் இப்படித் தாக்கும் கடவுளாக இருக்கிறானே என்று யோசிக்கிறீர்களா? தீயவர்களை அழித்தால் தான் நல்லவர்கள் வாழ முடியும் என்பது அவன் கொள்கை. அதனால் தான் போர் புரிய மறுத்த அர்ஜுனை அம்பு தொடுக்கச் சொல்லி ஆணையிட்டான். அதற்கென்ன இப்போது? என்கிறீர்களா? இங்கே நமக்கு ஒரு செய்தி காத்திருக்கிறது. நாடாளும் மன்னன் திருமால் அம்சம் என்று சாத்திரம் கூறுகிறது. “திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்” என்றார் ஆழ்வாரும். நாடாளும் மன்னன் நல்லவருடைய பாதுகாப்பிற்காக தீயவரை அழிக்க வேண்டும். அது பாவமில்லை. அவனுடைய கடமை. இதைப் பற்றிக் கூறும்போது திருவள்ளுவர், “கொலையிற் கொடியாரை வெந்தொறுத்தல் பைங்கூழ் களைகட்டதனொடு நேர்” என்கிறார். களைகளாய் முளைத்திருக்கும் பயிர்களும் உயிர்கள் தானே என்று இரக்கப்படாமல் விவசாயி எப்படிக் களைகளைப் பிடுங்கி எறிந்து நெற்பயிரைக் காப்பானோ அதுபோல சமுதாயட்திற்குத் தீங்கு விளைவிக்கும் துஷ்டர்களை மன்னன் கொல்ல வேண்டும் என்பது அதன் பொருள். இந்தக் கதையெல்லாம் எங்களுக்கு எதற்கு என்று வியக்கிறீர்களா? காரணம் இருக்கிறது. தூக்கு தண்டனை தேவையில்லை என்றும் கைதிகள் மேல் இரக்கப்பட வேண்டும் என்றும் இன்று நாடெங்கும் பேச்சு அடிபடுகிறது. கைதிகள் மேல் இரக்கப்படுகிறவர்கள் எஞ்சிய சமுதாயத்தின் மேல் இரக்கப்படுகிறார்களா என்று சிந்திக்க வேண்டும். நூற்றுக் கணக்கான பேர் சாவதற்கு காரணமாக ஒருவன் வெடிகுண்டு வைக்கிறான்.

அவனுக்குச் சில ஆண்டுகள் சிறை போதும் என்று இன்றைய சமுதாயம் தீர்ப்பு வழங்குகிறது. நன்னடத்தை என்ற பெயரில் அந்தக் கால அளவும் குறைக்கப்பட்டு அவன் சீக்கிரமே விடுதலையாகி விடுகிறான்; அல்லது மந்திரிகளின் சிபாரிசினால் தண்டிக்கவே படாமல் நிரபராதி என்று அறிவிக்கப்படுகிறான்.

இது நாட்டுக்கு நல்லதா? "ஆயிரம் குற்றவாளிகள் தப்பினாலும் பரவாயில்லை; ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது" என்று இந்தியச் சட்டம் நீதி தேவதை போல் பேசுகிறது. ஆனால் ஆயிரம் குற்றவாளிகளைத் தப்பிக்க விடுவது ஒரு நிரபராதியை தண்டிப்பதை விட கொடுமையானது என்று சட்டம் இயற்றுவோர் அறிவார்களா? தப்பிக்கும் அந்த குற்றவாளிகள் சமுதாயத்தில் உள்ள லட்சக்கணக்கான நிரபராதிகளின் வாழ்வைப் பாழாக்கப் போகிறார்கள் என்பதைப் பற்றி இவர்கள் சிந்திட்டார்களா? குற்றவாளிகளைச் சமுதாயட்தில் நடமாட விடுவது எவ்வளவு பெரிய குற்றம்? குற்றவாளியை தண்டிக்காத மன்னனுக்கு அந்தக் குற்றவாளியின் பாவமனைத்தும் போய்ச் சேரும் என்று ஸ்ம்ருதிகள் சொல்லுகின்றன. இதை ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் உணர்வார்களா?

கொலையாளிக்குக் கொலைத் தண்டனை கொடுத்தால் 'ஒரு கொலைக்கு தண்டனை இன்னொரு கொலையா?' என்று வாய் பிளக்கிறார்கள். குற்றவாளிகளை என்ன செய்ய வேண்டும் என்று இவர்கள் நினைக்கிறார்கள்? கருணையே வடிவான தசரதராமன் குற்றவாளிகளைத் தன் கையாலேயே வெட்டி, சிரச்சேதம் செய்ததாக நமக்கு ராமாயணம் சொல்கிறது. தகுந்த தண்டனை தராத அரசாங்கம் ஒரு நெறி நேர்மையான சமுதாயத்தை உருவாக்க முடியாது. கண்டிப்பைக் காட்ட வேண்டிய இடட்தில் கனிவைக் காட்டினால் சிரிப்பைப் பார்க்க வேண்டிய சமுதாயட்தில் நாம் அழுகையைத் தான் பார்க்க நேரிடும். தன் மகனை தேர்க் காலில் இட்டுக் கொன்ற சோழ மன்னனும், தன் கையைத் தானே வெட்டிக் கொண்ட பாண்டியனும் இந்த நாட்டில் தானே தோன்றினார்கள்? இரக்கம், மன்னிப்பு என்று பேசி இன்று நாடெங்கும் நம் தேசம் குண்டர்களையும் குண்டு வைப்பவர்களையும் வளர்த்து விட்டிருக்கிறது. இவர்கள் மனித உடலின் கிருமிகள் போன்றவர்கள். கிருமிகள் அழியாமல் ஆரோக்யம் இல்லை. தீயவர்களை ஒழிக்காமல் தேசீய சுபிட்சம் இல்லை. சம்பந்தப்பட்ட துறையினர் இதைக் கருட்தில் கொண்டு வன்மையை எங்கே காட்ட வேண்டும், மென்மையை எங்கே நாட்ட வேண்டும் என்று முடிவெடுத்துச் செயல்பட்டாலே ஒழிய நமக்கு அமைதியான வாழ்வு கிட்டாது. வீட்டுக்குள்ளே வாழ்ந்தாலும், ரோட்டின் மேலே சென்றாலும் எந்த நேரம் எது நிகழுமோ என்ற பீதியுடனேயே ஒரு நாட்டின் குடி மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தால் அந்த நாட்டில் நீதி செலுத்த வேண்டிய பொறுப்பில் உள்ளவர்களுக்கு அது பெருமையா? சிறுமையா?